பக்கங்கள் 19+ 02

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆடி 25 ஞாயிற்றுக்கிழமை 10.08.2025 | அதிர்வு 010

## 500 முன்னாள் எம்.பிக்களின் ஓய்வூதியம் இரத்தாகும் நிலை



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக் குரிய ஓய்வூதியம் இரத்துச் செய்யப்பட்டால் 500 வரையான முன்னாள் எம்.பிக்கள் ஓய்வூதியக் கொடுப் 02▶

## ‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# முல்லை. இளம் குடும்பஸ்தரின் சடலம்: உடற்கூற்று மாதிரிகள் கொழும்புக்கு

(ந.லோகதயாளன்)

முல்லைத்தீவு, முத்துஐயன்கட்டுக் குளத்தில் காயங்களுடன் மீட்கப்பட்ட இளம் குடும்பஸ்தரின் சடலம் மீதான உடற்கூற்றுப் பரிசோதனை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்டதுடன் மாதிரிகள் மேலதிக பகுப்பாய்வுக்காக கொழும்புக்கு அனுப்பப்படவுள்ளன. 02▶



# முல்லைத்தீவில் மக்கள் மீது பொலிஸாரும் அடாவடித்தனம்

### நடவடிக்கை எடுக்கத் தவறினால் போராட்டம் வெடிக்கும் என்று பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு ரவிகரன் எம்.பி. கடும் எச்சரிக்கை

(விஜயரத்தினம் சரவணன், பா.சதீசன்)

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் மக்களோடு அடாவடித்தன 02▶

## கிளிநொச்சியில் கார் மோதி பெண்ணொருவர் மரணம்



கிளிநொச்சி, அக்கராயன் – முறிகண்டி பிரதான வீதியின் அமை திபுரத்துக்கு அண்மித்த பகுதியில் இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற வாகன விபத்தில் பெண் ஒருவர் உயி ரிழந்துள்ளார்.

முறிகண்டிப் பகுதியில் இருந்து முழங்காவில் நோக்கிப் 02▶

# முத்துஐயன்கட்டு இளம் குடும்பஸ்தர் படுகொலையின் மறைகரங்கள் உடனே வெளிக்கொணரப்பட வேண்டும்

### காதர் மஸ்தான் எம்.பி. வலியுறுத்து



முல்லைத்தீவு மாவட்டத்தின் முத்துஐயன்கட்டு பிரதேசத்தில் அண்மையில் இடம்பெற்ற படுகொலைச் சம்பவத்தின் பின்னணி வெளிக்காட்டப்பட்டு இப்படுபாதகத்தைச் செய்தவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீலங்கா தொழிலாளர் கட்சியின் நாடாளுமன்றக் குழுக்களின் தலைவருமான கே.காதர் மஸ்தான் விடுத்துள்ள ஊடகக் அறிக்கையில் 02▶



# யாழில் மலேரியாவால் ஒருவர் மரணம்!

(எஸ்.நிதர்ஷன்)


யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் மலேரியா நோயுடன் அனுமதிக்கப்பட்ட நபர் சிகிச்சை பலனின்றி நேற்று சனிக்கிழமை உயிரிழுந்துள்ளார்.

நெடுந்தீவைச் சேர்ந்த 38 வயதான நபரே உயிரிழந்துள்ளார்.

இந்த நபர் ஐரோப்பிய நாடொன்றுக்குச் செல்லும் நோக்குடன் ஆபிரிக்க நாட்டில் சில காலம் தங்கியிருந்த நிலையில், ஐரோப்பிய நாட்டுக்குச் செல்லும் முயற்சி கைகூடாத நிலையில் கடந்த 2 ஆம் திகதி மீண்டும் நெடுந்தீவை வந்தடைந்துள்ளார்.

இந்நிலையில் கடந்த 4 ஆம் திகதி கடுமையான நடுக்கம், மாறாட்டம் போன்ற அறிகுறிகளுடன் இரவு 10.30 மணிக்குநெடுந்தீவுவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அங்கிருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு உடனடியாகவே இடமாற்றம் செய்யப்பட்டார்.

யாழ். போதனா வைத்தியசாலையில் உடனடியாகவே தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு உரிய சிகிச்சைகள் அவருக்கு அளிக்கப்பட்டன.




கடந்த 5 ஆம் திகதி காலையில் இவரது குடும்பத்தினர் மூலம், இவர் ஆபிரிக்க நாட்டுக்குச் சென்று வந்த தகவல் கிடைத்ததும் மலேரியாவுக்கான பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு அவருக்கு மலேரியா நோய் இருப்பது உறுதிப்படுத்தப்பட்டது. அவருக்கு உடனடியாகவே மலேரியா நோய்க்கான ஊசி மருந்துகள் ஏற்றப்பட்டன .

தொடர்ச்சியாக ஒவ்வொரு நாளும் மேற்கொள்ளப்பட்ட மலேரியாவுக்கான குருதிப் பரிசோதனையில் கடந்த 7 ஆம் திகதி அவரது குருதியில் மலேரியாக் கிருமிகள் முற்றாக அழிக்கப்பட்டன என்று உறுதிப்படுத்தப்பட்டது.

ஆயினும், அவருக்குக் காணப்பட்ட பல்வேறு வேறு நோய் நிலைகளால் அவர் சுயநினைவற்று தீவிர சிகிச்சைப் பிரிவில் ஆபத்தான நிலையிலேயே சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே உயிரிழந்துள்ளார்.

## முல்லைத்தீவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாகச் செயற்படுவதாக மக்களால் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனுக்குத் தெரியப்படுத்தியிருந்த நிலையில், அந்தப் பொலிஸ் உத்தியோகத்தர் மீது நடவடிக்கை எடுக்குமாறு ரவிகரன் எம்.பி. ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் வலியுறுத்தி யுள்ளார்.

அத்தோடு அந்தப் பொலிஸ் உத்தியோகத்தர் மீது நடவடிக்கை எடுக்கத் தவறினால் எதிர்வரும் 16ஆம் சனிக்கிழமை ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக மக்களோடு இணைந்து பாரிய ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்படும் என்றும் ரவிகரன் எம்.பியால் இதன்போது ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரொட்விக்கோ என்னும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையப் பிரிவுக்குட்பட்ட மக்கள் மீது பொய்க் குற்றங்களைப் பதிவு செய்வது, மக்கள் மீது அத்துமீறித் தாக்குவது, மக்களுக்கு மன உளைச்சல் ஏற்படும் வகையில் செயற்படுவது உள்ளிட்ட பல்வேறு அத்துமீறல் செயற்பாடுகளை மேற்கொண்டு வருவதாக மக்களால் ரவிகரன் எம்.பியிடம் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## முத்துஐயன்கட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக் கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

“யுத்தம் முடிவடைந்த பின்னரும் சிறுபான்மை மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் இடம்பெறுகின்ற இவ்வாறான நிகழ்வுகளை ஏற்றுக் கொள்ள முடியாது. இந்தப் படுபாதக சம்பவங்கள் காரணமாக அந்தப் பகுதி மக்கள் ஐயமும் பீதியும் அடைந்துள்ளனர்.

ஆகவே, மக்கள் பெரும் நம்பிக்கையில் வாக்களித்து ஆட்சிப்பீடம் ஏறி உள்ள இந்த அரசு இந்த நிலைமைகளைக் கருத்தில்கொண்டு விரைவாகச் செயற்பட்டு குற்றவாளிகளைக் கண்டுபிடித்து சட்டத்தின் முன் நிறுத்துமாறு வேண்டிக்கொள்கின்றோம்.” – என்றுள்ளது.

## கிளிநொச்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் எதிரே வந்த கார் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இயக்கச்சி, பளைப் பகுதியைச் சேர்ந்த 44 வயதுடைய பெண்ணே உயிரிழந்துள்ளார்.

விபத்து சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## 500 முன்னாள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பனவை இழப்பார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

முன்னாள் எம்.பிக்களின் ஒன்றியம் இது தொடர்பான தகவலை வெளியிட்டுள்ளது என்று சிங்கள வார இதழொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

“ஓய்வூதியக் கொடுப்பனவில் வாழும் முன்னாள் எம்.பிக்கள் இந்த முடிவால் பாதிக்கப்படுவார்கள். சிலர் மருத்துவ செலவுகளைக்கூட கவனிக்க முடியாத சூழ்நிலை ஏற்படும்.” – என்று மேற்படி ஒன்றியத்தின் செயலாளர் பிரேமசிறி தெரிவித்துள்ளார். எனவே, ஓய்வூதியக் கொடுப்பனவை அரசு இரத்துச் செய்யக் கூடாது எனவும், அது ஜனநாயகத்தைக் கேள்விக்குறி யாக்கும் எனவும் அவர் சுட்டிக்காட்டி யுள்ளார்.

## முல்லை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முத்துஐயன்கட்டுப் பகுதியில் கடந்த 7ஆம் திகதியன்று இராணுவத்தால் தாக்கப்பட்டுக் காணாமல்போனதாகத் தேடப்பட்டு வந்த 32 வயதான எதிர்மன்னசிங்கம் கபில்ராஜ் என்ற இளம் குடும்பஸ்தரே நேற்று சனிக்கிழமை முத்துஐயன்கட்டுக் குளத்தில் இருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதியின் முன்னிலையில் சடலம் குளத்தில் இருந்து மீட்கப்பட்டதுடன், தடயவியல் பொலிஸாரால் தடயவியல் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டது.

யாழ். போதனா வைத்தியசாலையில் சட்ட வைத்திய அதிகாரியால் உடற்கூற்றுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட நிலையில் மரணத்துக்கான தெளிவான காரணம் குறிப்பிடப்படாமல் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டதுடன் மேலதிக பகுப்பாய்வுக்காக மாதிரிகள் கொழும்புக்கு அனுப்பப்படவுள்ளன.



# அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி விடுதலை நீர் சேகரிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

நெடுங்காலமாகச் சிறைகளில் வாடும் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி இன்று ஞாயிற்றுக்கிழமை அராலி முத்தமிழ் சனசமூக நிலையத்தில் விடுதலை நீர் சேகரிப்பு இடம்பெற்றது.

இந்த விடுதலை நீர் சேகரிப்பதற்கு முன்னர் இரண்டு நிமிட அகவணக்கம் செலுத்தப்பட்டது. பின்னர் அராலிப் பகுதி மக்கள், சிறுவர்கள் ஆகியோர் தமது வீட்டில் இருந்து எடுத்து வரப்பட்ட விடுதலை நீரைப் பானையில் ஊற்றினார்.

குரல் அற்றவர்களின் குரல் அமைப்பால் முன்னெடுக்கப்பட்டும் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்திய இந்த வேலைத்திட்டத்தில் அந்த அமைப்பின் செயற்பாட்டாளர் மு. கோமகன், யாழ்ப்பாணம் பல்கலைக் கழக மாணவர்கள், சிறகுகள் அமைப்பினர், முத்தமிழ் சனசமூக நிலையத்தினர், அராலி பகுதி மக்கள் மற்றும் சிறார்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தச் செயற்றிட்டமானது வடக்கு – கிழக்கு தமிழர் தாயகம் எங்கும் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் எதிர்காலத்தில் அரசியல் கைதிகளின் விடுதலையை விரும்பும் புலம்பெயர் தேசங்களிலும் இந்த விடுதலை நீர் சேகரிக்கப்படவுள்ளது.

இவ்வாறு சேகரிக்கப்படும் நீர் விடுதலை மரம் ஒன்றை நாட்டி வைத்து அந்த மரத்துக்கு ஊற்றப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.





# உதவிப் பொலிஸ் பரிசோதகர் ஒருவர் தன்னைத்தானே சுட்டு உயிர்மாய்ப்பு!

உதவிப் பொலிஸ் பரிசோதகர் ஒருவர் தன்னைத்தானே சுட்டு உயிரை மாய்த்துக்கொண்டுள்ளார்.

வீரகுள பொலிஸ் நிலையத்தில் கடமை புரியும் உதவிப் பொலிஸ் பரிசோதகரே இன்று இவ்வாறு உயிரை மாய்த்துக்கொண்டுள்ளார்.

இவர் தனது சேவைத் துப்பாக்கியால் தன்னைத்தானே சுட்டு உயிரை மாய்த்துக் கொண்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.





**நமது கருத்து**
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# நாட்டின் நீதித் துறை

'சீஸரின் மனைவி சந்தேகத்திற்கு அப்பாற்பட்டவராக இருக்க வேண்டும்' என்பது கிறிஸ்துவுக்கு முன்பிருந்தே புழங்கும் ஒரு சொற்றொடர்.

நீதித்துறையில் - குறிப்பாக நீதிபதி ஸ்தானத்தில் - அமர்ந்திருப்பவர்கள் சந்தேகத்துக்கு அப்பாற்பட்டவர்களாகவும், பக்கம் சாராதவர்களாகவும், நடுநிலையாளர்களாகவும், நீதியைப் பின்னிற்காது நடைமுறைப்படுத்தத் துணிந்தவர்களாகவும் இருக்க வேண்டும். அப்போதுதான் நீதி நிலை நாட்டப்படுவதான நம்பிக்கை மக்களுக்கு ஏற்படும்.

இலங்கையில் இந்த நிலைமை உண்டா என்பதுதான் கேள்வி.

நாட்டின் சிறுபான்மையினரான தமிழர்களைப் பொறுத்தவரை இனச் சிக்கல்கள்சம்பந்தப்பட்ட விடயங்களில் இலங்கையின் நீதித்துறை இனவாத - பேரினவாத - சிந்தனையில் மட்டுமே நடந்து கொள்கின்றது, அதுவே தென்னிலங்கையின் பரவணிப் பண்பியல்பு என்ற பட்டறிவு அவர்களின் மாறாத நிலைப்பாடாக இருந்து வருகின்றது.

இலங்கையின் மோசமான இன யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் தமிழினத்திற்கு எதிராக இழைக்கப்பட்டவை எனக் கூறப்படும் யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், அடிப்படை மனித உரிமை மீறல்கள் ஆகியவை தொடர்பான விடயத்தில் இலங்கையின் நீதித்துறையிடம் இருந்து நீதி, நியாயமான தீர்வு கிட்டாது என்ற ஒரே தீர்மானத்தில் தமிழர்கள் இருப்பதற்கு காரணம் கடந்த ஆறு, ஏழு தசாப்தங்களாக இனச் சிக்கல்கள் சம்பந்தப்பட்ட விவகாரங்களில் இலங்கையின் நீதித்துறை நடந்து கொண்ட விதமும் போக்கும் தீர்ப்பும் என்பதும் எல்லோருக்கும் தெரிந்த விடயம்தான்.

பௌத்த - சிங்கள இனவாதத்தை முன்னிறுத்தும் விவகாரத்தில் தென்னிலங்கையின் ஆட்சியாளர்களில் இருந்து - நிறைவேற்ற அதிகாரத்திலிருந்து - சட்ட வாக்கல் சபையில் இருந்து - நீதித்துறையில் இருந்து - அனைத்துத் தரப்புகளுமே அடக்கு முறையையும் ஒடுக்கு முறையையும் மேலாதிக்கத்தையும் திணிக்கும் இரும்பு சட்டம் போன்ற கட்டமைப்புக்களாகவே இருந்து வருகின்றன என்பதுதான் தமிழர்களின் அனுபவம். இந்த விடயத்தில் அவை அனைத்தும் ஒரு குட்டையில் ஊறிய மட்டைகள்தாம்.

இந்தப் பின்புலத்தில்தான் இலங்கையின் நீதிச் சேவை ஆணைக்குழு சேவையில் உள்ள சுமார் 30 நீதிவான்கள் மற்றும் மாவட்ட நீதிபதிகள் மீது முறைப்பாடுகள் மற்றும் குற்றச்சாட்டுகளைத் தொடர்ந்து ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப் பரிசீலித்து வருகிறது என்ற செய்தி வெளியாகியுள்ளது.

கடந்த வாரத்தில், நீதிச் சேவை ஆணைக்குழு ஐந்து நீதிபதிகளைப் பணிநீக்கம் செய்தது. அவர்களில் மொறட்டுவ மாவட்ட நீதிபதி திலின கமகே மற்றும் மொனறாகலை கூடுதல் மாவட்ட நீதிபதி ரஞ்சனி கமகே ஆகியோரும் அடங்குவர்.

பணிநீக்கம் செய்யப்பட்ட மற்ற மூன்று நீதிபதிகளும் சமீபத்தில் நீதித்துறை சேவையில் சேர்க்கப்பட்டவர்கள். அவர்களில் ஒருவர் தேர்தலில் போட்டியிட்டவர் எனவும், அவர் நீதிபதியாக நியமிக்கப்படுவதற்கு முன்பு அதை வெளிப்படுத்தவில்லை என்றும் கூறப்படுகிறது.

இப்போது பெறப்பட்டுள்ள முறைப்பாடுகளின் அடிப்படையில் விசாரணைகளை நடத்த நீதிச் சேவை ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது. அது, விசாரணையைத் தொடர முடிவு செய்தால், ஒரு குற்றப்பத்திரிகை வெளியிடப்பட்டு, குற்றச்சாட்டுகளை விசாரிக்க ஒரு மூத்த நீதிபதி நியமிக்கப்படுவார் என்றும் கூறப்பட்டது.

எது, எப்படியாயினும் ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை அவர்கள் இலங்கையின் நீதி முறைமைக் கட்டமைப்பின் மூலம் தங்களுக்கு நீதி, நியாயம் கிடைக்கும் நம்பிக்கையில் இல்லை என்பதுதான் உண்மை.



# சமஷ்டி முறையை வலியுறுத்தி திரியாயில் மக்கள் போராட்டம்

(ஹஸ்பர் ஏ.எச்)

வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவினால் நடைமுறைப்படுத்தப்படும் 100 நாள் செயன்முனைவின் 10 ஆவது நாள் நிகழ்வு நிகழ்வு இன்று திருகோணமலை மாவட்டத்தின் குச்சவெளி பிரதேசத்திற்குட்பட்ட திரியாய் கிராமத்தில் இடம்பெற்றது.

பல வழிகளிலும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட திரியாய் மக்கள் தொடர்ந்தும் நில அபகரிப்புக்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

இன்றைய தினம் கூடிய மக்கள் ஒருங்கிணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்திற்கு மீளப்பெற முடியாத அதிகார பகிர்வுடன் கூடிய சமஸ்டி முறையிலான அரசியல் தீர்வினை அரசிடம் வலியுறுத்தினர்.

இதில் பெருமாபாலான மக்கள் கலந்து கொண்டிருந்தனர்.







# இலங்கைக்கு கடத்த இருந்த காய்ந்த இஞ்சி பறிமுதல்

**(மன்னார் நிருபர்)**

மண்டபம் அடுத்து வேதாளை கடற்கரையில் இருந்து சட்டவிரோதமான முறையில் நாட்டுப்படகில் இலங்கைக்கு கடத்த இருந்த சுமார் ஒரு தொன் எடை கொண்ட காய்ந்த இஞ்சி வாகனத்துடன் மரைன் பொலிஸாரால் நேற்று சனிக்கிழமை இரவு பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

பறிமுதல் செய்யப்பட்ட பொருள்கள் மண்டபம் சுங்கத்துறை அலுவலகத்தில் ஒப்படைத்தனர்.

இராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் அடுத்த வேதாளை கடற்கரையில் மண்டபம் மரைன் பொலிஸார் ரோந்து பணியில் ஈடுபட்ட போதே இலங்கைக்கு கடத்துவதற்காக வாகனத்தில் கொண்டு வரப்பட்ட 35 மூட்டைகளில் சுமார் ஒரு தொன் எடை கொண்ட மேற்படி காய்ந்த இஞ்சி பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

மேலும் பறிமுதல் செய்யப்பட்ட காய்ந்த இஞ்சி மதிப்பு பல லட்சம் இருக்கலாம் எனவும் கைப்பற்றப்பட்ட வாகனத்தின் பதிவு எண் கொண்டு தப்பி ஓடிய மர்ம நபர்கள் தீவிரமாக தேடி வருவதாக மரைன் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.





# இலங்கையின் முதலாவது பணக்காரனாக முதலிடத்தைப் பிடித்த இஸாரா நாணயக்கார

கல்ஃப் நியூஸ் வெளியிட்ட தகவலின்படி, 2025ஆம் ஆண்டு நிலவரப்படி 1.6 பில்லியன் அமெரிக்க டொலர் நிகர மதிப்புடன் இஸாரா நாணயக்கார இலங்கையின் முதல் நிலை செல்வந்தராகத் திகழ்கின்றார்.

இதன் மூலம், அவர் தம்மிக்க பெரேராவை முந்தி நாட்டின் பணக்கார பட்டியலில் முதலிடத்தைப் பிடித்துள்ளார்.

கல்ஃப் நியூஸ் வெளியிட்ட தெற்காசியப் பணக்காரர்களின் பட்டியலில், இந்திய தொழில் அதிபர் முகேஸ் அம்பானி 118 பில்லியன் அமெரிக்க டொலர் நிகர மதிப்புடன் பிராந்தியத்தின் மிகப் பெரிய செல்வந்தராக இடம்பெற்றுள்ளார்.

பாகிஸ்தானின் ஸாஹித் கான் 13.5 பில்லியன், பங்களாதேஸஷின் மோசா பின் ஸம்ஸர் 12 பில்லியன், நேபாளத்தின் பினோத் சவுத்ரி 1.6 பில்லியன் மற்றும் இலங்கையின் இஸாரா நாணயக்கார 1.6 பில்லியன் டொலர் நிகர மதிப்புடன் தங்களது நாடுகளின் முதலிடத்தில் உள்ளனர்.

அம்பானியின் சொத்து மதிப்பு, பட்டியலில் இரண்டாவது இடத்தில் உள்ள ஸாஹித் கானின் மதிப்பை விட கிட்டத்தட்ட பத்து மடங்கு அதிகம் என அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இஸாரா நாணயக்கார, 10 இற்கும் மேற்பட்ட நாடுகளில் செயற்படும் பன் முகப்படுத்தப்பட்ட நிதி சேவைகள் மற்றும் முதலீட்டு நிறுவனத்தை வழிநடத்தி



வருகின்றார்.

உலகளாவிய நுண்நிதி மற்றும் காப்பீட்டுத் துறைகளில் இலங்கையின் இருப்பை விரிவுபடுத்துவதில் அவர் வகித்த பங்கு குறிப்பிடத்தக்கது.



மலையக பெருந்தோட்ட பகுதிகளில் உள்ள பாடசாலை மாணவர்கள் இன்று புலமை பரிசில் பரீட்சையில் ஆர்வத்துடன் தோற்றினார்கள். மாணவர்கள் பரீட்சை மண்டபங்களுக்கு செல்வதை படங்களில் காணலாம். (படங்கள்: பொகவந்தலாவ நிருபர்)














# கல்முனை அல்- ஹுஸைனியா பாலர் பாடசாலை சிறுவர் சந்தை

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

கல்முனை அல்- ஹுஸைனியா பாலர் பாடசாலை ஆண்டுதோறும் நடாத்திவரும் சிறுவர் சந்தை நிகழ்வு கல்முனை அல்-பஹ்ரியா மகா வித்தியாலத்தில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்றது.

முன்னாள் மக்கள் தோட்ட அபிவிருத்தி பிரதியமைச்சரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எஸ். நிஜாமுதீன் நிகழ்வில் பிரதம அதிதியாகவும், முன்னாள் கல்முனை மாநகர சபை உறுப்பினர் ஏ.எல். அன்ஸார் நிகழ்வில் கௌரவ அதிதியாகவும் கலந்து சிறப்பித்தனர்.

இதில் பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.







புத்தளம் சாஹிரா ஆரம்ப பாடசாலையின் 5 ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சை எழுத இருக்கின்ற மாணவர்கள் சாஹிரா தேசிய பாடசாலையில் அமைக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத் துக்குள் பிரவேசிக்க தயாராக இருப்பதை படத்தில் காணலாம்.

(படம்: எம்.எச்.எம். சியாஜ்)





# சாய்ந்தமருதில் இடம்பெற்ற மாபெரும் இரத்ததான முகாம்

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

சாய்ந்தமருது அல்-ஜலால் வித்தியாலயத்திற்கு முன்பாக உள்ள சுகாதார நிலையத்தில் மாபெரும் இரத்ததான முகாமொன்று நேற்று சனிக்கிழமை இடம்பெற்றது.

எஸ்.பி. பௌண்டேஸன், ரியல் ப்ளாஸ்டர் விளையாட்டு கழகம் மற்றும் ஸ்ரீலங்கா யுனைட்ஸ் ஆகிய அமைப்பினர் இணைந்து ஏற்பாடு செய்த இந்த இவ் உயிர் காக்கும் உயரிய பணியில் பொதுமக்கள், சமூக செயற்பாட்டாளர்கள் குறிப்பாக இளைஞர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு இரத்த தானம் வழங்கினர்.

கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையின் வைத்தியர் குழாம், இரத்த வங்கியின் உத்தியோகத்தர்கள் மற்றும் தாதியர்கள் இணைந்து இந்த இரத்ததானங்களைப் பெற்றுக் கொண்டனர்.










# அலங்கார காவடிகளுடன் சிறப்பாக நடைபெற்ற மாவடி ஸ்ரீ கந்தசுவாமி ஆலய தீர்த்தோற்சவம்

**(வி.ரி. சகாதேவராஜா)**

காரைதீவு மாவடி ஸ்ரீ கந்தசுவாமி ஆலய வருடாந்த ஆடிவேல் விழா மஹோற்சவ தீர்த்தோற்சவம் அலங்கார காவடிகளுடன் ஊர்வலமாகச் சென்று நேற்று சனிக்கிழமை காரைதீவுக் கடலில் சிறப்பாக நடைபெற்றது.

கடந்த 25 ஆம் திகதி கொடியேற்றத்துடன் தொடங்கிய இந்த மகோற்சவம் தினமும் பகல் இரவு திருவிழாவாக வசந்தமண்டப பூஜையும் சுவாமி உள் வீதி வெளிவீதி வருதலும் இடம்பெற்று வந்தது.

உற்சவகால ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வரக் குருக்கள் தலைமையில் திரு விழாக்கள் சொற்பொழிவுகள் தேரோட்டம் சகிதம் சிறப்பாக நடைபெற்று வந்தன.

நேற்று சனிக்கிழமை வள்ளிதெய்வானை சமேத முருகப் பெருமான் அண்ணன் விநாயகப் பெருமான் காவடி சகிதம் ஊர்வலமாக வந்து சமுத்திர தீர்த்தம் இடம் பெற்றது.

பல நூற்றுக்கணக்கான பக்தர்கள் ஊர்வலத்திலும் தீர்த்தோற்சவத்திலும் கலந்து கொண்டனர்.



















# புலமைப் பரிசில் பரீட்சை எழுதிய அம்பாறை மாவட்ட மாணவர்கள்

(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டத்திலுள்ள கல்முனை சம்மாந்துறை அக்கரைப் பற்று கல்வி வலயங்களில் இன்று ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சை அமைதியாக இடம்பெற்றது.

இந்த மாணவர்கள் மகிழ்ச்சியுடன் சென்றதை காண முடிந்தது, எனவும் நூற்றுக்கணக்கான மாணவர்கள் பரீட்சை நிலையத்திற்கு பெற்றோருடன் வருகை தந்திருந்தனர் என எமது பிராந்திய செய்தியாளர் தெரிவித்தார்.















# அட்டாளைச்சேனையில் நல்லிணக்க செயலமர்வு

(எம் எப். நவாஸ்)

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு, அரச கரும மொழிகள் திணைக்களம் மற்றும் தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்துக்கான செயலகம் போன்றவற்றின் ஒருங்கிணைப்பில் மத நல்லிணக்க நிகழ்வு நேற்று நடைபெற்றது.

அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் ஏ.சி. அகமட் அப்கரின் வழிகாட்டலில் தேசிய ஒருமைப்பாட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எம்.எம். றிஸானின் நெறிப்படுத்தலில் அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில், அம்பாறை மாவட்ட உளவளத் துணை உத்தியோகத்தர் மனூஸ் அபூவக்கர் கலாச்சார உத்தியோகத்தர் எம். எஸ்.எம்.ஜஃபர், பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ஐ.பியாஸ், சிங்கள பாட விரிவுரையாளர் எம்.எம்.பாசில் மற்றும் பல்வேறு துறைகளைச்சேர்ந்த குழுவின் பங்கு பற்றுதலுடன் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில், தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுக்கான செயலகத்தினால் 100 மணித்தியால சிங்கள பாடநெறிகளை பூர்த்தி செய்த முன்பள்ளி ஆசிரியைகளுக்கான சான்றிதழ் வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும்.














# தேசிய தொழிலாளர்சங்கத்தின் தலைவர் இந்திய உயர்ஸ்தானிகர்களுடன் சந்திப்பு

**(மஸ்கெலியா நிருபர்)**

தொழிளாலர்சங்கத்தின் தலைவர் இந்திய உயர் ஸ்தானியர்களை நேற்று மஸ்கெலியா ஹோட்டல் ஆகீல்ஸ்சில் சந்தித்தார்,

இந்தச் சந்திப்பில் இலங்கைக்கான இந்தியா துணை உயர்ஸ்தானிகர் சத்தி யாஞ்சல் பாண்டே மற்றும் இந்திய இணை உயர்ஸ்தானிகர் (கண்டி) வீ.எஸ் சரண்யா மற்றும் தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான பழனி திகாம்பரம், மஸ்கெலியா பிரதேச சபையின் தலைவர் க.இராஜ்குமார், பிரதி தலைவர் ப.ராஜ் அசோக் மற்றும் சங்கத்தின் உயர் அதி காரிகள் கலந்து கொண்டனர்.

நேற்றைய சந்திப்பில், இலங்கையில் உள்ள இந்திய வம்சாவளி மக்களுக்கு இந்திய அரசின் மூலம் வீடுகள் அமைத்து கொடுத்தல், கல்வி கற்று வேலை இன்றி உள்ள இளைஞர் யுவதிகளுக்கு வேலை வாய்ப்பு பெற்று கொடுத்தல் மற்றும் பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் உள்ளிட்ட கோரிக்கை இந்திய உயர்ஸ்தானிகர்களிடம் முன வைக்கப்பட்டது.












# டைம்ஸ் சதுக்கத்தில் துப்பாக்கிச் சூடு

## மூவர் காயம்

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் புகழ்பெற்ற டைம்ஸ் சதுக்கத்தில் நேற்று அதிகாலை 1.20 மணியளவில் மர்ம நபர் ஒருவரால் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந்த துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் மூவர் காயமடைந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் அதிர்ச்சியடைந்த மக்கள் உயிரைப் பாதுகாத்துக் கொள்வதற்காக ஓடியுள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் குறித்து அறிந்து டைம்ஸ் சதுக்கத்திற்கு விரைந்த பொலிஸார் , காயமடைந்தவர்களை மருத்துவமனையில் அனுமதித்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.










## உக்ரைன் போர் குறித்த விவாதம்;

# இங்கிலாந்து வெளியுறவுச் செயலாளர் டேவிட் அமெரிக்க துணை ஜனாதிபதியுடன் சந்திப்பு

உக்ரைனில் நடக்கும் போர் குறித்து விவாதிக்க அமெரிக்க துணை ஜனாதிபதி ஜே.டி. வான்ஸ்ம் இங்கிலாந்து வெளியுறவுச் செயலாளர் டேவிட் லாம்மியும் லண்டனுக்கு அருகில் உள்ள இடம் ஒன்றில் பாதுகாப்பு அதிகாரிகளின் கூட்டத்தை நடத்தியுள்ளனர்.

அமெரிக்காவின் வேண்டுகோளின் பேரில் இந்தப் பேச்சுவார்த்தைக்கு அழைப்பு விடுக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

அவர்களுடன் இந்த சந்திப்பில் உக்ரைன் அதிகாரிகள் மற்றும் ஐரோப்பிய தேசிய பாதுகாப்பு ஆலோசகர்களும் பங்கேற்றனர்.

இந்தநிலையில் நீதியான மற்றும் நீடித்த அமைதியை நோக்கி தொடர்ந்து பணியாற்றி வருவதால், உக்ரைனுக்கு இங்கிலாந்து அளிக்கும் ஆதரவு இரும்புக் கவசமாகவே உள்ளது என இதன் போது லாம்மி கூறியுள்ளார்.

அடுத்த வாரம் அலாஸ்காவில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மற்றும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் ஆகியோருக்கு இடையேயான உச்சி மாநாட்டிற்கு முன்னதாக, ரஷ்யாவுக்கு எந்த பிராந்திய சலுகைகளையும் வழங்கப்போவதில்லை என்று உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் செலென்ஸ்கி வலியுறுத்திய நிலையில், இந்த சந்திப்பு நிகழ்ந்துள்ளது.

இதேவேளை போரை முடிவுக்குக் கொண்டுவர உக்ரைன் பிரதேசம் ஒன்றை விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கலாம் என்று ட்ரம்ப் ஏற்கனவே கருத்துரைத்துள்ளார்.

இரண்டு நாடுகளின் நன்மைக்காகவும் சில பிரதேசங்களை மாற்றுவது அமையும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பல உக்ரைனிய பிராந்தியங்களின் மீதான ரஷ்ய இறையாண்மையை உக்ரைன் அங்கீகரிக்க வேண்டும், இராணுவமயமாக்கலை கைவிட வேண்டும் மற்றும் அதன் நேட்டோ அபிலாசைகளை கைவிட வேண்டும் என்று ரஷ்யா தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

இந்தநிலையில் உக்ரைனியர்கள் தங்கள் நிலத்தை ஆக்கிரமிப்பாளருக்குக் கொடுக்க மாட்டார்கள் என்று உக்ரைன் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

# காசா நகரை கையகப்படுத்த முயற்சிக்கும் இஸ்ரேல் பிரதமருக்கு எதிராக போராட்டம்




காசா நகரத்தை கையகப்படுத்தும் இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாகுவின் திட்டத்திற்கு எதிராக இஸ்ரேலிய மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர்.

ஹமாஸினால் தடுத்து வைக்கப்பட்டுள்ள பணயக்கைதிகளுக்கு ஆதரவாக போராட்டக்காரர்கள் ஜெருசலேமில், பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் இல்லத்தை நோக்கி பேரணியாகச் சென்று இந்த எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

இஸ்ரேலின் ஹைஃபா போன்ற நகரங்களில் போராட்டங்கள் இடம்பெற்றுள்ளன. ஆயிரக்கணக்கான மக்கள் டெல் அவிவிலும் கூடி கோசங்களை எழுப்பியுள்ளனர்.

முன்னதாக, காசாவில் தனது போரை விரிவுபடுத்த இஸ்ரேல் எடுத்த முடிவு, இங்கிலாந்து, பிரான்ஸ் மற்றும் கனடா உள்ளிட்ட பல நாடுகளிடமிருந்து எதிர்ப்பை பெற்றுள்ளது.

அத்துடன் இஸ்ரேலுக்கான இராணுவ ஏற்றுமதியை நிறுத்த ஜேர்மனியும் தீர்மானித்துள்ளது.



# டில்லியில் கனமழையால் சுவர் இடிந்து 2 சிறுமிகள் உட்பட 8 பேர் உயிரிழப்பு

டில்லியில் பெய்த கனமழை காரணமாக நேற்று மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. டில்லியின் ஹரி நகர் பகுதியில் சுவர் இடிந்து விழுந்த சம்பவத்தில் 8 பேர் உயிரிழந்தனர்.

தலைநகர் டில்லி மற்றும் அதை யொட்டிய பகுதிகளில் நேற்று முன்தினம் இரவு தொடங்கி நேற்று காலை வரை மழை பெய்தது. இதனால் பஞ்சுயான் மார்க், மதுரா ரோடு, கன்னாட்பிளேஸ், ஆர்.கே.புரம், மோதி பாக், கித்வாய் நகர் உள்ளிட்ட பகுதிகளில் சாலைகளில் தண்ணீர் தேங்கியது. இதனால் வாகனப் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

டில்லி இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்தில் நேற்று காலையில் 15 விமானங்கள் தாமதாக தரையிறங்கின. இதுபோல் இங்கிருந்து 120 விமானங்கள் தாமதமாகப் புறப்பட்டன. கனமழையால் ரக்ஷா பந்தன் பண்டிகை நாளான நேற்று மக்களின் இயல்பு வாழ்க்கை மிகவும் பாதிக்கப்பட்டது.

இந்நிலையில் டில்லி ஜைதாபூர், ஹரிநகரில் கனமழை காரணமாக நேற்று காலையில் ஒரு வீட்டின் சுவர் இடிந்து விழுந்தது. தகவல் அறிந்த பொலிஸார் மற்றும் தீயணைப்பு படையினர் அங்கு விரைந்து சென்று மீட்புப் பணியில் ஈடுபட்டனர். இதில் இடிபாடுகளில் சிக்கி உயிருக்கு ஆபத்தான நிலையில் இருந்த 8 பேரை மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். எனினும் 2 சிறுமிகள், 2 பெண்கள் உள்ளிட்ட 8 பேரும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர்.

இதுகுறித்து காவல் துணை ஆணையர் ஐஸ்வர்யா சர்மா கூறுகையில்,

“இரவு முழுவதும் பெய்த கனமழை காரணமாக சுவர் இடிந்து விழுந்துள்ளது. இப்பகுதியில் ஆபத்தான கட்டடங்களில் வசித்து வந்த பலர் பாதுகாப்பான இடத்துக்கு மாற்றப்பட்டுள்ளனர்.” என்றார்.

இந்நிலையில் வடக்கு, மேற்கு, தெற்கு, தென்கிழக்கு மற்றும் மத்திய டெல்லி மாவட்டங்களுக்கு வானிலை ஆய்வு மையம் நேற்று கன மழைக்கான சிகப்பு எச்சரிக்கை விடுத்தது.

# வெள்ளத்தில் காணாமல் போன கணவரை தேடி அலையும் மனைவி



உத்தராகண்ட் பெருவெள்ளத்தில் காணாமல்போன ஹோட்டல் அதிபரை, அவரது மனைவி தேடி அலைகிறார்.

கடந்த 5 ஆம் திகதி உத்தராகண்டின் கங்கோத்ரி கோயிலுக்கு அருகே ஏற்பட்ட மேகவெடிப்பால் பெருவெள்ளம் ஏற்பட்டது. இதில் தரளி என்ற கிராமம் முழுமையாக அழிந்துள்ளது.

கடந்த சில நாள்களில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பத்திரமாக மீட்கப்பட்டு உள்ளனர். சுமார் 150 பேர் மண்ணில் புதைந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. தரளி கிராமத்தை சேர்ந்த சுபம் நெகி (வயது 32) அங்கு ஹோட்டல் நடத்தி வந்தார். அவரது ஹோட்டல் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு உள்ளது. அவரையும் காணவில்லை. அவரது மனைவி கோமல் (வயது 28) கடந்த சில நாள்களாக கணவரை தேடி அலைகிறார்.

இதுகுறித்து கோமல் தெரிவிக்கையில்,

“பெருவெள்ளம் ஏற்பட்டபோது நான் தரளி கிராமத்தில் இல்லை. உத்தரகாசிக்கு சென்றிருந்தேன். வெள்ள பாதிப்பு குறித்து அறிந்தவுடன் தரளி கிராமத்துக்கு விரைந்து சென்று எனது கணவரை தேடி வருகிறேன். கட்டுப்பாட்டு அறை, மருத்துவமனை, உறவினர்கள் வீடுகளில் தேடி அலைகிறேன். எனது கணவர் உயிரோடு இருக்கிறாரா, இல்லையா என்பது தெரியவில்லை.

கடந்த ஆண்டு ஜனவரியில் எங்களுக்கு திருமணம் நடைபெற்றது. அவர் உயிரோடு இருப்பார் என்று நம்புகிறேன். எப்படியாவது அவரை தேடி கண்டுபிடிப்பேன்.” என்று கண்ணீருடன் தெரிவித்தார்.

மீட்புப் பணியில் ஈடுபட்டிருக்கும் இராணுவ கப்டன் குர்பிரீத் சிங் தெரிவிக்கையில்,

“தரளி கிராமத்தில் 300 ஃஇராணுவ வீரர்கள் மீட்புப் பணியில் ஈடுபட்டு இருக்கிறோம். சுமார் 80 ஏக்கர் பரப்பளவில் 20 அடி முதல் 50 அடி உயரம் வரை சகதி மூடியிருக்கிறது. சுற்றுவட்டார வீதிகள், பாலங்கள் அனைத்தும் சேதமடைந்து உள்ளன. உத்தரகாசியில் இருந்து கங்கோத்ரி கோயிலுக்கு செல்லும் பிரதான வீதி மிக கடுமையாக சேதமடைந்திருக்கிறது.

இந்த வீதியை சீரமைக்க 4 நாள்கள் வரை ஆகலாம். இதன்பிறகே நவீன இயந்திரங்கள், கனரக வாகனங்களை தரளி கிராமத்துக்கு கொண்டு வந்து சகதியை அகற்றி சடலங்களை மீட்க முடியும்.” என்று தெரிவித்தார்.



# குழந்தைகள், பிரம்ம குமாரிகளுடன் ரக்‌ஷா பந்தன் கொண்டாடினார் மோடி

சகோதர பாசத்தை வெளிப்படுத்தும் ரக்‌ஷா பந்தன் விழா இந்தியா முழுவதும் நேற்று கொண்டாடப்பட்டது. இவ்விழாவை முன்னிட்டு பிரதமர் நரேந்திர மோடி தனது எக்ஸ் பக்கத்தில் மக்களுக்கு வாழ்த்துகளை தெரிவித்துள்ளார்.

மேலும் பிரதமர் மோடியின் இல்லத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அவருக்கு பாடசாலை குழந்தைகள் ராக்கி கயிறு கட்டினர். பின்னர் பள்ளி குழந்தைகளுடன் அவர் கலந்துரையாடினார். இதையடுத்து, பிரம்ம குமாரிகள் அமைப்பினரும் பிரதமர் மோடியை அவரது இல்லத்தில் சந்தித்து ராக்கி கயிறு கட்டினர். இது தொடர்பான காணொலி மற்றும் புகைப்படங்கள் சமூக வலைதளங்களில் வெளியாகி வைரலாக பகிரப்பட்டு வருகின்றன.

மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா எக்ஸ் பக்கத்தில் வெளியிட்ட பதிவில்,

“சகோதர சகோதரிகளுக்கு இடையிலான அன்பு, நம்பிக்கை மற்றும் பாதுகாப்புக்கான அர்ப்பணிப்பு ஆகியவற்றின் பிரிக்க முடியாத பிணைப்பை வெளிப்படுத்தும் ரக்‌ஷா பந்தன் விழாவை முன்னிட்டு நாட்டு மக்களுக்கு இதயம் கணிந்த வாழ்த்துகள்.” என பதிவிட்டுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் தனது எக்ஸ் பக்கத்தில், “ரக்‌ஷா பந்தன் விழாவுக்காக அனைவருக்கும் இதயம் கணிந்த வாழ்த்துகள். நமக்குள் இருக்கும் பாதுகாப்பு உணர்வை இந்த விழா மேலும் வலுப்படுத்த வேண்டும்.” என பதிவிட்டுள்ளார்.





கனடா முரசு
பக்கங்கள் 02
ஞாயிற்றுக்கிழமை 10/08/2025

## வாகன விபத்தில் சிறுமி உயிரிழப்பு



கனடாவின் பார்க்லாண்ட்டின் ஸ்ப்ரூஸ் க்ரோவில்

02

# பொதுக்கழிப்பறை வடிவமைப்பில் கனடாவில் இருவர் பரிசு வென்றனர்



கனடாவில் பொதுக்கழிப்பறை வடிவமைக்கும் போட்டியில் இரண்டு பேர் பரிசு வென்றுள்ளனர்.

ஹமில்டனை மையமாகக் கொண்ட இரண்டு கட்டட வடிவமைப்பாளர்கள் பொதுக் கழிப்பறை அமைத்து பரிசு வென்றுள்ளனர்.

அனைவரினாலும் பயன்படுத்தக் கூடிய, அனைவரினாலும் பிரவேசிக்கக் கூடிய மற்றும் பேண்தகு கழிப்பறைகள் நிர்மானிப்பதில் போட்டி நடத்தப்பட்டுள்ளது.

02

# டொராண்டோவில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் பலி




டொராண்டோ நகர மையத்தில் வாகனம் ஒன்று மோதியதில் காயமடைந்த 28 வயதான ஒருவர் மருத்துவமனையில் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் அறிவித்துள்ளனர்.

கடந்த ஜூலை 18ஆம் திகதி சர்ச் மற்றும் ஜெரார்ட் தெரு பகுதியில் இந்த விபத்துச் சம்பவம் பதிவாகியுள்ளது.

விபத்தில் காயமடைந்த நபர் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

ஜெரார்ட் வீதியில் மின்சார சைக்கிளில் (இ-பைக்) மேற்கு நோக்கி சென்று கொண்டிருந்தபோது, பிக்அப் ரக வாகனமொன்றில் மோதியதில் படுகாயமடைந்து பின்னர் உயிரிழந்துள்ளார்.

57 வயதான பிக்கப் டிரக் சாரதி சம்பவ இடத்தில் இருந்து விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கியுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து தொடர்பிலான விசாரணை தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.






# கனடா சிறிய ரக விமான விபத்தில் பலியான இளைஞரின் உடல் இந்தியா அனுப்பப்படுகிறது

கனடாவில் சிறிய ரக விமானம் ஒன்று விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த கேரள இளைஞர் ஒருவர் பலியான நிலையில், அவரது உடல் திங்கள் கிழமை இந்தியா கொண்டு செல்லப்படவுள்ளது.

கனடாவின் Newfoundland and Labrador மாகாணத்தில், வான்வழி ஆய்வு நிறுவனம் ஒன்றில் தொழில்நுட்ப வல்லுநராக பணியாற்றிவந்தவர் கௌதம் சந்தோஷ் (வயது 27).

இந்தியாவின் கேரள மாநிலத்தைச் சேர்ந்த கௌதம், ஜூலை மாதம் 26 ஆம் திகதி நிகழ்ந்த விமான விபத்தொன்றில் பலியானார்.

அவர் பயணித்த விமானம் விழுந்து நொருங்கியதில், கௌதமும், அந்த விமானத்தின் விமானியான 54 வயது நபரும் பலியாகிவிட்டார்கள்.

விபத்தில் கௌதமின் உடல் கருகிவிட்டதால், கனடாவிலேயே அவருக்கு இறுதிச்சடங்கு நிகழ்த்த அவரது உறவினர்கள் திட்டமிட்டுள்ளார்கள்.

ஆனால், தன் மகனை இந்தியாவுக்குக் கொண்டுவரவேண்டும் என கௌதமின் தாயார் ஆசைப்பட்டதால், அவரது உடல் திங்கள் கிழமை காலை இந்தியாவுக்குக் கொண்டுவரப்பட உள்ளது.

திங்கள் கிழமை, கௌதமின் உடல் கேரளாவின் தலைநகரான திருவனந்தபுரத்திலுள்ள Santhi Kavadam என்னுமிடத்தில் தகனம் செய்யப்பட உள்ளது.

# பிரம்டனில் இடம்பெற்ற மோதலில் ஒருவர் உயிரிழப்பு, இருவர் காயம்




பிராம்ப்டனில் மோதல் சம்பவத்தினைத் தொடர்ந்து ஒருவர் உயிரிழந்துடன் இருவர் பலத்த காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

பீல் பிராந்திய பொலிஸார் இந்த தகவலை தெரிவித்துள்ளனர்.. சென்டர் ஸ்ட்ரீட் மற்றும் குயின் ஸ்ட்ரீட் கிழக்கு பகுதியில் அதிகாலை 12:30 மணியளவில் மோதல் குறித்த தகவல் கிடைக்கப்பெற்றுள்ளது.

பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்தபோது, ஒருவர் உயிரிழந்த நிலையில் இருப்பதையும், இருவர் உயிருக்கு ஆபத்து இல்லாத காயங்களுடன் இருப்பதையும் கண்டறிந்துள்ளனர்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய ஒரு சந்தேக நபர் காவலில் எடுக்கப்பட்டுள்ளார் என பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளனர்.

இது ஒரு தனிமைப்படுத்தப்பட்ட சம்பவம், பொது பாதுகாப்புக்கு எந்த அச்சுறுத்தலும் இல்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்த சம்பவம் குறித்து தகவல் அல்லது கண்காணிப்பு கருவி காட்சிகள் உள்ளவர்கள், பொலிஸாரிடம் தகவல்களை வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## வாகன விபத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இடம்பெற்ற வாகன விபத்தில் 9 வயது சிறுமி பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்துச் சம்பவம் ஹார்ட்விக் மேனர் பகுதியில் இடம்பெற்றுள்ளது. 9 வயது சிறுமி தனது ஸ்கேட்போர்டில் அமர்ந்திருந்தபோது, அது வீட்டின் முன்புற பாதையில் இருந்து உருண்டு சென்றுள்ளது.

அந்த ஸ்கேட்போர்ட்டை எடுக்கச் சென்ற போது வீதியில் பயணம் செய்த பிக்கப் டிரக்கால் சிறுமி மோதுண்டுள்ளார் என ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சிறுமி மிகவும் ஆபத்தான நிலையில் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார் எனவும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்த சம்பவத்தில் ட்ரக் சாரதிக்கோ வேறு எவருக்கோ காயங்கள் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## பொதுக்கழிப்பறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கோவிட் பெருந்தொற்று காலத்தில் பொதுக்கழிப்பறைகளின் அவசியம் வெகுவாக காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வசதி குறைந்த சமூகத்தினர் இந்த வசதிகளை பயன்படுத்த நேரிட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பெருந்தொற்று காலத்தில் பல நிறுவனங்கள் மூடப்பட்ட காரணத்தினால் மக்கள் இவ்வாறு பொதுக் கழிப்பறைகளை பயன்படுத்த நேரிட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அனைத்து சமூகங்களையும் கருத்திற் கொண்டு பொதுக் கழிப்பறைகளை வடிவமைக்கும் போட்டியில் அலியா ரெய்ட் மற்றும் பெட்ரா மாட்டார் ஆகிய கட்டிட கலைஞர்கள் முதல் இடத்தைப் பெற்றுக்கொண்டுள்ளனர்.